பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**13 05 2026 WEDNESDAY 12.40 PM**

ஆகாஷவாணி

# தலைப்புச் செய்திகள்

**1.** தமிழகத்தில் முதலமைச்சர் திரு ஜோசப் விஜய் தலைமையிலான தவெக அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றது.

**2.** புதுச்சேரி முதலமைச்சராக அகில இந்திய என் ஆர் காங்கிரஸ் தலைவர் திரு என். ரங்கசாமி பதவியேற்றார்.

**3.** இந்தோனேஷிய வெளியுறவு அமைச்சர் **Sugiono** பிரிக்ஸ் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக புதுதில்லி வந்துள்ளார்.

**4.** நீட் முறைகேடு தொடர்பாக மத்திய புலனாய்வுப் படையின் சிறப்புப் பிரிவினர் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

**5.** தென்கொரிய சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

... இனி விரிவான செய்திகள் ...

<<<<<>>>>>

தமிழகத்தில் தவெக தலைவரும், முதலமைச்சருமான திரு ஜோசப் விஜய் தலைமையிலான அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றுள்ளது.

பேரவையில் இன்று முதலமைச்சர் திரு ஜோசப் விஜய், தமது தலைமையிலான தவெக அரசின் மீது நம்பிக்கைக்கோரும் அரசினர் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

அரசுக்கு ஆதரவாகவும், அரசை எதிர்த்தும் உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை முன்வைத்தனர்.

எதிர்க்கட்சித் தலைவரும், திமுக சட்டமன்ற கட்சித் தலைவருமான திரு உதயநிதி ஸ்டாலின், வாக்களித்த மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் அரசாக இந்த அரசு செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் திமுக உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை என்று கூறி, தங்களது கட்சி உறுப்பினர்களுடன் அவர் வெளிநடப்பு செய்தார்.

இதற்குபின்னர், பேரவைத் தலைவர் திரு ஜே சி டி பிரபாகர் எண்ணிக்கை அடிப்படையிலான நம்பிக்கை வாக்கெடுப்புக்கு உத்தரவிட்டார்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் அவையில் இருந்த 171 உறுப்பினர்கள் கலந்துகொண்ட நிலையில், தவெக அரசுக்கு ஆதரவாக 144 பேர் வாக்களித்தனர்.

எதிராக 22 பேர் வாக்களித்தனர். ஐந்து உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

அஇஅதிமுக-வின் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையிலான 22 உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

அந்த கட்சியை சேர்ந்த 25 உறுப்பினர்கள் தவெக அரசை ஆதரித்து வாக்களித்துள்ளனர்.

வாக்கு எண்ணிக்கையை பேரவையில் அறிவித்த திரு ஜே சி டி பிரபாகர், தவெக தலைமையிலான அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றதாக அறிவித்தார்.

நம்பிக்கை வாக்கெடுப்புக்குப்பின் முதலமைச்சர் திரு ஜோசப் விஜய் பேசியபோது, தமது அரசு அனைத்துத் தரப்பு மக்களையும் அரவணைத்து செல்லும் என்றும் மதச்சார்பற்ற அரசாக செயல்படும் என்றும் கூறினார்.

முதலமைச்சரின் உரைக்கு பின்னர், பேரவையை மறு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுவதாக பேரவைத் தலைவர் திரு ஜே சி டி பிரபாகர் அறிவித்தார்.

<<<<<<>>>>>

அகில இந்திய என் ஆர் காங்கிரஸ் தலைவர் திரு ரங்கசாமி ஐந்தாவது முறையாக புதுச்சேரி முதலமைச்சராக இன்று பதவியேற்றார்.

துணை நிலை ஆளுநர் திரு கைலாசநாதன், புதுச்சேரி மக்கள் மாளிகையில் திரு ரங்கசாமிக்கு பதவி பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்துவைத்தார்.

திரு ரங்கசாமி அமைச்சரவையில் அகில இந்திய என் ஆர் காங்கிரஸின் திரு மல்லாடி கிருஷ்ணாராவும், பிஜேபி உறுப்பினர் திரு நமச்சிவாயமும் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

இந்த பதவியேற்பு நிகழ்ச்சியில் பிஜேபி தேசிய தலைவர் திரு நிதின் நபின், பிஜேபி தேசிய பொதுச்செயலாளர் திரு பி எல் சந்தோஷ், புதுச்சேரி பிஜேபி தலைவர் திரு வி பி ராமலிங்கம் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

தங்கம் மற்றும் விலை உயர்ந்த உலோகப் பொருட்களின் இறக்குமதியை குறைக்கும் நோக்கில் அவற்றுக்கான இறக்குமதி வரியை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

இதுதொடர்பாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தங்கம் மற்றும் வெள்ளிக்கான இறக்குமதி வரி ஐந்து சதவீதம் உயர்த்தப்படுவதாக தெரிவித்துள்ளது.

பிளாட்டினத்திற்கான இறக்குமதி வரி ஐந்து புள்ளி நான்கு சதவீதம் உயர்த்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதர விலை உயர்ந்த உலோகப் பொருட்களுக்கு நான்கு புள்ளி மூன்று ஐந்து சதவீதம் வரி உயர்த்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காசியாவில் நிலவும் அசாதாரண சூழல் காரணமாக, தங்கம் வாக்குவதை தவிர்க்குமாறு பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடம் அழைப்பு விடுத்திருக்கும் நிலையில், மத்திய அரசு இவற்றுக்கான இறக்குமதி வரியை உயர்த்தியுள்ளது.

<<<<<<>>>>>

இந்தோனேஷிய வெளியுறவு அமைச்சர் **Sugiono** நாளை தொடங்கும் பிரிக்ஸ் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக புதுதில்லி வந்துள்ளார்.

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கலந்துகொள்ளும் இந்த மாநாட்டில், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது.

உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் அவர்களுடன் வந்துள்ள தூதுக்குழுவினரும் இதில் கலந்துகொள்கின்றரன.

மாநாட்டையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடியையும் பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்து பேச உள்ளனர்.

இம்மாநாட்டையொட்டி உலகளாவிய மற்றும் மண்டல அளவிலான விஷயங்கள் குறித்து உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் பிரதமரிடம் ஆலோசிக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி காரில் பயணிக்கும்போது பின்தொடரும் **Convoy** பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை குறைத்துள்ளார்.

அண்மையில் குஜராத் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களுக்கு சென்றபோது, பிரதமரை பின்தொடரும் பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் சிக்கனத்தை பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தி விடுத்த அழைப்புக்கு முன்னுதாரணமாக திகழும் வகையில் இந்த வாகனங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதுகாப்புப் படையினர் பின்தொடரும் வாகனங்களை மின் வாகனங்களாக மாற்ற வேண்டும் எனவும் பிரதமர் கேட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரைத் தொடர்ந்து உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா-வும் Convoy வாகனங்களின் எண்ணிக்கையை குறைத்துள்ளார்.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்தும் வாகனங்களின் எண்ணிக்கையை 50 சதவீதம் குறைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று சிலி நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் **Francisco Mackenna**-வை சந்தித்து பேசியுள்ளார்.

இதுதொடர்பாக, டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சிலி நாட்டுடனான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும், இருதரப்பு வர்த்தகம், பொருளாதாரம் உள்ளிட்டவை குறித்தும் விவாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

பல்வேறு முக்கிய விஷயங்களில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

வளர்ச்சிக்கான எழுச்சிமிகு கிராமங்கள் நிகழ்ச்சிக்காக இளைஞர்களை தெரிவு செய்வதற்காக தேசிய அளவிலான ஆன் லைன் வினாடி — வினாவை மத்திய அரசு அறிவித்துள்ளது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகம், மத்திய உள்துறை அமைச்சகத்துடன் இணைந்து நடத்தும் இந்த வினாடி — வினா நிகழ்ச்சியில் நாட்டில் அனைத்துப்பகுதியில் உள்ள இளைஞர்களும் பங்குபெறலாம்.

மை பாரத் இணையதளம் வாயிலாக நடைபெறும் இந்த வினாடி - வினாவில் இம்மாதம் 20-ஆம் தேதிவரை கலந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு உடல் தகுதி பரிசோதனை நடத்தப்பட்டு, 500 பேர் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும், அடுத்த மாதம் நடைபெறவுள்ள வளர்ச்சிக்கான எழுச்சிமிகு கிராமங்கள் நிகழ்ச்சியில் பங்குபெறுவார்கள் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

நீட் முறைகேடு தொடர்பாக விசாரிக்க மத்திய புலனாய்வுப் படையின் சிறப்புப் பிரிவினர் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூர் சென்றுள்ளனர்.

இதில் 25-க்கும் மேற்பட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

ராஜஸ்தான் மாநில காவல்துறையின் பாதுகாப்போடு பொதுமக்களிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சிக்கார் பகுதியில் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப், மூன்று நாள் பயணமாக சீனா சென்றுள்ளார்.

சீன அதிபர் திரு ஸி ஜின்பிங்-கின் அழைப்பை ஏற்று அந்நாட்டு தலைநகர் பெய்ஜிங்கில் இரு தலைவர்களும் நாளை இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும், பொருளாதாரம், வர்த்தகம் தொடர்பாகவும் பேச்சுக்கள் நடத்த உள்ளனர்.

**Hormuz** நீரிணைப்பகுதியில் பாதுகாப்பாக கப்பல்கள் செல்வது குறித்தும், யுக்ரைன் விவகாரம் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சுக்கள் நடத்தக்கூடும் என்றும் தெரிகிறது.

<<<<<>>>>>

சர்வதேச போதைப்பொருள் குற்றவாளியான திரு பிரதீப் சிங்கை மத்திய புலனாய்வுப் பிரிவினர் வெற்றிகரமாக, அஜர்பைஜானில் இருந்து இந்தியா கொண்டுவந்துள்ளனர்.

வெளியுறவுத்துறை அமைச்சகம், உள்துறை அமைச்சகத்துடன் இணைந்து இதற்கான முயற்சியை அஜர்பைஜான் நாட்டு அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு இதனை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 160-க்கும் மேற்பட்டோர் பல நாடுகளில் கைது செய்யப்பட்டு இந்தியா கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் சிபிஐ தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

தென்மேற்கு பருவமழை இந்த வாரத்தில் தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலின் தென்பகுதியில் நிலவிவரும் சூழல் பருவமழை தொடங்குவதற்கான அறிகுறியை வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இவ்வார இறுதியில் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, அதே இடத்தில் நீடிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது புயலாக உருவாகக்கூடும் என்றும், அடுத்த 24 மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக வலுப்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக தென்மேற்கு பருவமழை ஜூன் முதல் வாரத்தில் தொடங்கும் என்றும், ஆனால் இவ்வாண்டு முன்கூட்டியே தொடங்குவதற்கான வாய்ப்புள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

அமெரிக்காவும் இஸ்ரேலும் தங்கள் நாட்டின்மீது மீண்டும் தாக்குதல்களை தொடர்ந்தால், யுரேனியம் செறிவூட்டும் பணியை தொடங்குவோம் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக ஈரான் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவு கொள்கை குழுவின் செய்தி தொடர்பாளர் திரு. இப்ராஹிம் ரெசாய் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அணுஆயுத தயாரிப்புக்கு தேவையான 90 சதவீத அளவிலான யுரேனியத்தை செறிவூட்டுவதற்கு தங்கள் நாடு தயாராக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

தங்கள் நாட்டின் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டால், யுரேனியம் செறிவூட்டல் குறித்து நாடாளுமன்றம் பரிசீலிக்கும் என்று அவர் அதில் கூறியுள்ளார்.

ஈரான் மீதான தாக்குதலை அமெரிக்காவும், இஸ்ரேலும் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளன.

அமைதி ஒப்பந்தத்தை எட்டுவதற்கான முயற்சிகளில் தற்போது ஈரானும், அமெரிக்காவும் ஈடுபட்டுள்ளன.

இதனிடையே, ஈரான் தெரிவித்த அமைதி திட்டத்தை அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் நிராகரித்துள்ளார்.

இதனால், அமைதி ஒப்பந்தம் ஏற்படுவதில் தாமதம் ஏற்பட்டள்ளது.

<<<<<<>>>>>

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இந்தியா விரைவான வளர்ச்சியை அடைந்திருப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பின் மாநாட்டில் நேற்று உரையாற்றிய அவர், எரிசக்தி துறையில் நாடு அடைந்துள்ள பல்வேறு முன்னேற்றங்களை எடுத்துரைத்தார்.

தற்போதைய உலகளாவிய ஸ்திரமற்ற சூழலிலும், எரிசக்தி துறையில் இந்தியா தொடர்ந்து வலுவான நிலையில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில், மாற்று எரிபொருள் சார்ந்த எரிசக்தி திறன் **81** ஜிகாவாட் என்ற அளவிலிருந்து **288** ஜிகாவாட்டாக

அதிகரித்துள்ளதாகவும், இது, **280** சதவீத வளர்ச்சி என்றும் அவர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் மின்சாரத்தின் தேவை மிக அதிகஅளவை எட்டிய போதிலும், எவ்வித தடையும் இன்றி மின்விநியோகம் செய்யப்பட்டதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<<<>>>>>

தென்கொரியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **6-3, 6-2** என்ற செட் கணக்கில், தைவானின் **Ya Yi Yang**-ஐ வென்றார்.

-----------------

தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-9, 21-12** என்ற செட் கணக்கில் சீன தை-பேயின் **Tong Ciou Tung**-ஐ வென்றார்.

**<<<<<<END>>>>>**